**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**MCOP.No. 277/2023**

2025 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 19 ஆம் நாள் வியாழக்கிழமை
ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகேசன் | த/பெ.: | லேட்.கணேசன் |
| கிராமம்: | பெரிய சிங்காளந்தி | தாலுக்கா: | திருத்துறைப்பூண்டி |
| மதம்: | இந்து | தொழில்: | கொத்தனார் |
| வயது: | 49 | முகவரி: | பெரிய சிங்காளந்தி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 19.06.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 5ம் மனுதாரர் ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண பிரமான வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன் அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | -- | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.2 | -- | விபத்து பதிவேடு | நகல் |
| ம.சா.ஆ.3 | -- | பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.4 | -- | இறப்பு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. ) | நகல் |
| ம.சா.ஆ.5 | -- | வாரிசு சான்றிதழ் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. ) | நகல் |
| ம.சா.ஆ.6 | -- | காப்பீடு | நகல் |

மனுப்படி தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**<u>2ம், 3ம் எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :–</u>**

விபத்தில் இறந்து போனவர் எனது தந்தை. எனது தந்தையின் வயது, வருமானம் குறித்து ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை நான் நேரிடியாக பார்க்கவில்லை. புகார் யார் கொடுத்தார்கள் என்றால் நான் தான் கொடுத்தேன். உங்களுக்கு யார் விபத்தை பற்றி சொன்னார்கள் என்றால் கணபதி என்பவர் சொன்னார். என் அப்பா விபத்தில் இறந்தபொழுது வயது 90. என் அப்பா விபத்தில் இறந்தபொழுது திடக்காத்திரமாக, ஆரோக்கியத்துடன் இல்லை என்றால் சரியல்ல. எனது தாயாரான 1ம் மனுதாரருக்கு 70 வயது இருக்குமா என்றால் இருக்கும். 2ம் மனுதாரர் எந்த ஊரில் இருக்கிறார் என்றால் காடன்தேத்தி. 3ம் மனுதாரர் கற்பகம் எந்த ஊரில் உள்ளார் என்றால் சேலம். 4ம் மனுதாரர் எந்த ஊரில் உள்ளார் என்றால் சென்னை. 6ம் மனுதாரர் எந்த ஊரில் உள்ளார் என்றால் சென்னை. 7ம் மனுதாரர் எந்த ஊரில் உள்ளார் என்றால் சென்னை. 8ம் மனுதாரர் சென்னையில் உள்ளார். மனுதாரர்கள் அனைவருக்கும் திருமணமாகி அவர் அவர்கள் வேலை நிமித்தமாக வெவ்வேறு ஊர்களில் தனித்தனி குடும்பமாக இருக்கிறார்கள் என்றால் சரிதான். இறந்து போன எனது தந்தை யாரையும் நம்பி வாழவில்லை என்றும், அவர் தான் எங்களை நம்பி வாழ்தார் என்றும் அதனால் எந்த வருமான இழப்பும் இல்லை நஷ்ட ஈட்டு தொகை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. எனது தந்தை விபத்து ஏற்பட்டு மறுநாள் தான் இறந்தார் என்றால் சரிதான். அதனால், முதல் தகவல் அறிக்கையில் சட்டப்பிரிவு மாற்றும் செய்தது குறித்து எந்த

ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் அதை பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் கிடையாது என்றும், அதனால் 2ம் எதிர்மனுதாரர் எங்களுக்கு எவ்வித நஷ்ட ஈடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கு விபத்து சமயத்தில் 85 வயது என்பதாலும், சரியான கண் பார்வை இல்லாததாலும் அவரது அஜாக்கிரதையால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு முழுக்க முழுக்க என் தந்தைதான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் கேட்டுள்ள நஷ்ட ஈடு தொகை மிக அதிகம் என்றும், நாங்கள் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.